# இர்கொன் நிறுவனத்தால் இந்தியாவின் சுலபக் கடன் வசதி அடிப்படையில் மீளமைக்கப்பட்ட பளை - யாழ்ப்பாணம் புகையிரதப் பாதை மற்றும் சமிக்ஞை அமைப்பின் அங்குரார்ப்பணம்

மீளமைக்கப்பட்ட பளை - யாழ்ப்பாணம் புகையிரதப் பாதை மற்றும் சமிக்ஞை அமைப்பின் அங்குரார்ப்பண வைபவம் 2014 ஒக்ரோபர் 13ம் திகதியன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த வைபவத்தில் மேன்மை தங்கிய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கௌரவ போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம அவர்கள், கௌரவ பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்த அவர்கள் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ வை.கே. சிங்ஹா அவர்கள் கௌரவ போக்குவரத்து உதவி அமைச்சர் ரோஹணகுமார திசாநாயக்க அவர்கள், கௌரவ வட மாகாண ஆளுனர் (ஓய்வு பெற்ற) மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்கள், கௌரவ முருகேசு சந்திரகுமார். பா.உ அவர்கள், கௌரவ சில்வேஸ்திரி அலென்ரின் அவர்கள் மற்றும் போக்கு வரத்து அமைச்சு, இலங்கைப் புகையிரதப் பகுதி, வட மாகாண சபை மற்றும் இர்கொன் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் இவ் வைபவத்தின் போது பிரசன்னமாகியிருந்தனர்.

2. இவ்வைபவத்தின் ஒரு பகுதியாக முக்கிய பிரமுகர்கள் பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரை மீளமைக்கப்பட்ட புகையிரதப் பாதையில் புகையிரதப் பிரயாணம் செய்தனர். இந்திய அரசினால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட 800 மில்லியன் அமெரிக்க டொலர் இலகு கடன் வசதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வடபகுதிப் புகையிரதப் பாதை மீளமைப்புத் திட்டத்தின் 38 கிலோ மீட்டர் நீளமான பளை-யாழ்ப்பாணம் புகையிரதப் பாதை மீளமைக்கப்பட்டுள்ளது. கௌரவ இலங்கை ஜனாதிபதியின் 2010 ஜூன் மாதத்திய இந்திய விஜயத்தின்போது விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் இந்த உறுதிமொழி உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட மதவாச்சி– மடு புகையிரதப் பாதை 2013 மே 14ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரையான புகையிரதப் பாதை கௌரவ இலங்கை ஜனாதிபதியவர்களால் 2013 செப்ரெம்பர் 14ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி–பளை வரையான பகுதி கௌரவ போக்குவரத்து அமைச்சர் அவர்களால் 2014 மார்ச் 04ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

3. இந்தத் திட்டம் இந்தியாவின் அரச நிறுவனமான சர்வதேச இர்கொன் நிறுவனத்தினரால் அமுலாக்கம் செய்யப்படுகின்றது. இர்கொன் நிறவனமானது குறித்த காலத்திற்குள் இத்திட்டத்தைச் செய்து முடிப்பதற்காக ஒரே காலத்தில் மடுறோட்-தலைமன்னார் பகுதி, யாழ்ப்பாணம்-காங்கேசன்துறைப்பகுதி ஆகியவற்றைச் சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு வேலைகளுடன் ஒருங்கே செய்து கொண்டிருக்கின்றது.

4 யாழ்ப்பாணத்திற்குச் சேவையிலீடுபட்டிருந்த யாழ் தேவி புகையிரதச் சேவையை மீள ஆரம்பிக்கும் இந்த அங்குரார்ப்பணமானது, யாழ்ப்பாணத்தைக் கொழும்புடன் புகையிரத மூலம் மீள இணைப்பதால் முக்கியத்துவம் பெறுகின்றது. வடபகுதிப் பகையிரதச் சேவையின் மீள் ஆரம்பமானது வடமாகாணத்திலுள்ளோர்க்கு மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ளோரை வடமாகாணத்துடன் மீளத் தொடர்பு கொள்ள வைக்கின்றது. இதன் மூலம் அபிவிருத்தி, நல்லிணக்கம். மற்றும் மக்களிடையேயான தொடர்புகள் ஆகியவற்றை மேம்படுத்தமுடியும்.

5. வடபகுதிப் புகையிரத சேவையின் மீளமைப்பு இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான தொடர்புகளையும் அபிவிருத்தி செய்யும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்குமிடையேயான கப்பல் சேவையை விரைவில் மீண்டும் ஆரம்பிப்பதற்காகத் தலை மன்னாரில் ஒரு

இறங்குதுறையும் அமைக்கப்படவுள்ளது. கதிர்காமம் வரையிலான புகையிரத சேவை விஸ்தரிப்பும், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையேயான கப்பல் சேவையின் ஆரம்பமும் இலங்கை மக்கள் ஹம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய இடங்களிலிருந்து வடஇந்தியாவின் ஜம்மு மற்றும் காஷ்மீர், மேற்கிலுள்ள குஜராத், கிழக்கிலுள்ள அஸ்ஸாம் மற்றம் வடகிழக்கு மாநிலங்களுக்கு புகையிரதம் மூலம் பிரயாணம் செய்ய முடியும்.

6. இந்தியாவின் நெருங்கிய நீண்டகாலப் பங்காளிகள் என்ற முறையில் இந்தியா இலங்கைக்கு அமைதி, ஒற்றுமை, மற்றும் தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றில் பூரண ஒத்துழைப்பை வழங்க ஆயத்தமாகவுள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயான நல்லுறவின் ஒரு முக்கிய மைல்கல்லாக வடபகுதிப் புகையிரதப் பாதையின் மீளமைப்பு அமைகின்றது.

* * * * *